**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 20/2023 |
| | | D/W's | : | **DW 1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | காவேரி என்ற சர்மிளா | CASTE | : | |
| W/O | சிலம்பரசன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | கள்ளிவேலிப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 43 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.04.2026**

**குறுக்கு விசாரணை**

1. நான் 10 வரை வகுப்பு படித்துள்ளேன். 1ம் வாதிக்கும் கள்ளிவேலிப்பட்டியை சேர்ந்த சிலம்பரசனுக்கும் 08.11.1991 ல் திருமணம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி இரண்டு நபர்களுக்கும் பிறந்தவர் தான் 2ம் வாதி என்றால் சரிதான். எனக்கும் மேற்படி சிலம்பரசனுக்கும் 15.04.2001ல் திருமணம் நடந்ததாக எனது வாக்கு மூலத்தில் பேனாவால் 4 வது பத்தியில் எழுதப்பட்டு உள்ளது என்றால் சரிதான். பி,வா.சா.ஆ.5 திருமணப் பத்திரிக்கையில் 24.01.2001ம் தேதியில் திருமணம் என்று அச்சிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. மேற்படி திருமண பத்திரிக்கையின்படி மருத மலை கோவிலில் வைத்து திருமணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவில் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான். எனது திருமணம் மேற்படி கோவிலில் நடந்தது என்று காட்ட அந்த கோவிலில் வழங்கிய ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் சிலம்பரசனுக்கும் நடந்த திருமணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. சிலம்பரசனுக்கு எதிராக 1ம் வாதி விவாகரத்து மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். 1ம் வாதி சிலம்பரனுக்கு எதிராக வரதட்சனை கொடுமை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கின் தீர்ப்பை பி,வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1ம் வாதி

அவருக்கு வரதட்சணை கொடுமை ஏற்படவில்லை என்று சாட்சி அளித்து அந்த வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. சிலம்பரசனின் முதலாவது திருமணம் நிலுவையில் இருக்கும் போது நான் அவரை இரண்டாவதாக திருமணம் செய்து செல்லாது என்றால் சரியல்ல, அவர் விவாகரத்து செய்ததாக எழுதி கொடுத்திருந்தார். 1ம்வாதியும், சிலம்பரசனும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்களது சமூக வழக்கப்படி திருமணத்தை அவர்கள் சமூகத்திற்குள் தீர்த்து கொள்ளலாம் என்று வழக்கம் இருப்பதாக நான் ஆதாரங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. பி,வா,சா,ஆ,2 விவாகரத்து பத்திரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. 1ம் வாதியை பிரிந்து சிலம்பரசன் 2001 முதல் என்னுடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். பி,வா,சா,ஆ.6 ஆவணம் 1ம் வாதிக்கு 2005ம் ஆண்டு வழங்கப்பட்ட குடும்ப அட்டை சம்பந்தப்பட்ட விவரம் என்றால் சரியல்ல. அந்தக்காலகட்டத்தில் சிலம்பரசன் என்னுடன் சேர்ந்து 1ம் வாதியுடன் பிரச்சனை செய்ததால் அந்த குடும்ப அட்டையில் 1ம் வாதி அவர் பெயரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

6. 2ம் வாதி சிலம்பரசன் பெயரை அவர் தகப்பனர் பெயர் என்று எதிலும் குறிப்பிடவில்லை என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 திருமணப்பத்திரிக்கையில் நான் பிரச்சனை செய்ததால் சிலம்பரசன் பெயரை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை விண்ணப்பதாரர் கொடுக்கும் தகவல் அடிப்படையில் தான் விவரங்கள் குறிப்பிட்டு இருக்கும் என்றால் சரிதான்.

7. பி,வா,சா.ஆ.7,8 ஆவணங்கள் நான் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டவை என்றால் சரிதான். நான் சிலம்பரசனின் சட்டப்படியான மனைவி இல்லை என்பதால் வழக்கிற்கு அவசியத் தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. சிலம்பரசனின் சட்டப்படியான முதலாவது திருமணம் நிலுவையில் இருக்கும் போது நான் அவரை இரண்டாவதாக திருமணம் செய்தது சட்டப்படி செல்லாது என்றால்

சரியல்ல. 1ம் வாதி தான் சிலம்பரசனின் சட்டப்படியான மனைவி என்றால் சரியல்ல. அதனால் வாதிகளும் எனக்கும், சிலம்பரசனுக்கும் பிறந்த 1,2,3 பிரதிவாதிகள் இறந்து போன சிலம்பரசனின் வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் கேட்டு வாதி தாக்கல் செய்து உள்ள வழக்கு அவர்கள் ஆதரவாக தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

8. நான் அனைத்து உண்மைகளும் தெரிந்து கொண்டே தவறான விவரங்கள் சொல்லி வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல.

**4,5 பிரதிவாதிகள் சார்பாக குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/– M.P. Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.